செ.வெ.எண். 25/ஜூன் தேதி : 10.06.2016

**தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட பூனாத்தனஅள்ளி கிராமத்தில் நடைபெற்ற அம்மா திட்ட முகாம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**






தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட பூனாத்தனஅள்ளி கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இன்று (10.06.2016) நடைபெற்றது. பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளான புதிய குடும்ப அட்டை வேண்டி, சாலைவசதி, மின்சார வசதி, பசுமை வீடு, சாதி சான்றிதழ், சாக்கடை வசதி, தெரு மின்விளக்கு வசதி, குடிநீர் வசதி, நிலபட்டா தர வேண்டியும், நியாய விலைக்கடை, முதியோர் ஓய்வூதியம், இலவச தையல் இயந்திரம், வீட்டுமனைப்பட்டா வேண்டி, மின் இணைப்பு, முதியோர் ஓய்வூதிய தொகை, சிறு குறு விவசாயிகளுக்கு கடன் உதவி, ஜாதி சான்று, பிறப்பு சான்று, இறப்பு சான்று, இரண்டு பெண்குழந்தைகள் மட்டும் உள்தாள் சான்று, ஆண் வாரிசு இல்லை என சான்று, முதலமைச்சர் மருத்துவ காப்பீடு திட்டம், குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கல் முகவரி மாற்றம் மற்றும் திருத்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 64 மனுக்கள் பெற்று சம்மந்தப்பட்ட அலுவலரிடம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். மேலும் இம்முகாமில் சுகாதார துறையின் மூலம் வழங்கப்படும் நிலவேம்பு குடிநீரை பொதுமக்களுக்கு வழங்கினார்.

பின்னர் பூனத்தானஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட தமிழக அரசின் மின் ஆளுமை திட்ட சேவை மையத்தினையும், பொதுமக்கள் ஆதார் அட்டை எடுக்கும் பணியையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டார். பொதுமக்களிடம் ஜாதி சான்றிதழ், வருமான சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ், சிட்டா நகல்கள், வில்லங்கச்சான்றிதழ்கள், நில மதிப்பீடு சான்றிதழ், மகளிர் திருமண உதவி திட்டம், ஏழை விதவை மகள் திருமண உதவி திட்டம், ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவி திட்டம், பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம், ஆதார் கார்டு சேவைகளை பொதுமக்கள் அந்தந்த பகுதியிலேயே அம்மா திட்டம் முகாம் நடைபெறும் போது இந்த சேவை மையத்தின் மூலம் பதிவு செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து அங்குள்ள வீடுகளில் நேரில் சென்று குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் உணவு பொருட்கள் சரியாக வழங்கப்படுகிறதா என்று பதிவேட்டினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இம்முகாமில் வட்டாட்சியர் திரு. தமிழரசன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. அருள்மொழி தேவன், ஊராட்சி மன்ற தலைவர் திரு. பழனி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.